# இருட்டுல தொலைச்சிட்டு வெளிச்சத்தில் தேடினால் வைரமானாலும் கிடைக்காது!

ஒரு குழந்தை 4 வயது வரை பேசவே இல்லை என வருந்திக் கொண்டிருந்த சூழலில், ஒருநாள் குழந்தை பேசியதாம், “அம்மா நீ எப்ப தாலி அறுப்பாய்” என்று.

ஊரார் சொன்னார்கள். “இதற்கு இந்த குழந்தை பேசாமலேயே இருந்திருக்கலாமே” என்று.

சட்டசபையில் இரண்டு, மூன்று நாளா முதல்வர் விஜய் வாயை திறக்காது. உடலை அசைக்காது. வி.ஜி.பி. கடற்கரையில் நிற்பாரே ஒருவர் அவர் போல உட்கார்ந்து இருக்கிறாரே என்று பேசிய காலம் போய் இறுதி நாள் மதியமே பதில் தராமல், வீடு சென்று, யாரோ வீட்டில் எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து கொண்டு, மறுநாள் பேசியதின் விளைவு, விஜய்க்கு ஆதரவு தரும் கட்சிகளே விஜயினை கண்டிக்கும் சூழல்தான் விஜயின் நாற்பது நாள் சாதனை.

தளபதி ஸ்டாலினை தேட வேண்டுமா, தேடு. கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் தளபதி கிடைப்பார் தேடு. மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் தளபதி கிடைப்பார் தேடு. காலை உணவு திட்டத்தில் தளபதி கிடைப்பார் தேடு. இல்லம் தேடி சுல்வி, வீடு தோறும் மருத்துவம், உங்களுடன் ஸ்டாலின், நான் முதல்வன் போன்ற எண்ணற்ற திட்டங்களில் தேடிப்பார். அங்கே சிரித்துக் கொண்டே தெரிவார் எங்கள் தங்கத் தளபதி.

நல்லவன் கண்ணுக்கு நல்லதாகத் தெரியும் என புராணங்கள் சொல்கின்றன.

இளைய தலைவர் உதய் வைத்த குற்றச்சாட்டுகளில், உன் குடும்பப் பின்னணி இருந்தால், பதிலுக்கு நீயும் சொன்னால் கூட பெரிய தவறு இல்லை. ஆனால் உன் அரசின் தவறுகளை மட்டுமே சுட்டிக் காட்டினால், அதற்கு ஒரு வரி கூட பதில் சொல்லாமல், எதிர்க்கட்சி வெளிநடப்பு செய்த பின், ஆளில்லாத ஊரில் டீ ஆற்றுவது போல. எதிர்க்கட்சி இல்லாத சூழலில், விஷ வாயுவை ஆற்றுகிறீர்களே நியாயமா?

திவ்யா என்கிற குழந்தை லண்டனில் பட்டம் பெற்று திரும்புகையில், தனது தந்தை இல்லை என தேடியது என்பதையும். தன் கணவன் திருமண உறவுக்கு மீறி உறவு கொண்டுள்ளார் என வழக்குப் போட்டு மனைவி செங்கல்பட்டில் தேடுகிறார் என்பதையும், தன் அப்பாவை மகன் தேடுகிறான் என்றும் எங்களை சொல்ல வைத்து விட்டீர்களே விஜய்

ஒவ்வொரு ஆகஸ்ட் 15-ம் நாள் விடியற்காலையும் அண்ணன் ஆர்.எம்.வீயையும், பின் கலைஞரையும் நேரில் சென்று வாழ்த்துப் பெற்ற பின் தான். தன் வீடு வந்து வாழ்த்துக்களை தொண்டர்களிடம் பெற்றுக் கொள்வார் அண்ணன் டாக்டர் ஜெகத்ரட்சகன். எல்லோரும் அப்படித்தான். நீங்கள் மட்டும்தான் உங்கள் அப்பா அம்மாவையே வீட்டிற்குள்ளும் விடாமல், நேரிலும் செல்லாமல், கோட்டைக்கு வரச் சொல்லி ஆசிபெற்ற அதிசய பிறவி நீங்கள்.

உங்களுக்காக இறந்த 41 பேர் குடும்பத்தையும் உங்கள் இடத்திற்கு வரவழைத்துதான் உங்களால் ஆறுதலே சொல்ல முடிந்தது.

ஏன் அந்த 41 பேர் குடும்பத்தை கரூரில் தேடாமல். மாமல்லபுரத்தில் உங்களால் தேட முடிகிறபோது, தளபதியை அவரின் திட்டங்களிலோ. அறிவாலயத்திலோ தேட முடியாதா?

ஒரு முறை அண்ணன் தினமணி வைத்தியநாதன் அறிவாலயத்தில் நீண்ட கூட்டத்தில் கலைஞரை சந்திக்க முடியாததால், தலைவரே நாளை நான் தலைமைச் செயலகமாம் கோட்டையில் உங்களைச் சந்திக்கிறேன் என்றாராம். அதற்கு கலைஞர் எதுய்யா என் கோட்டை, தலைமைச் செயலகமா, அறிவாலயம் தான்யா என் கோட்டை, அறிவாலயத்தில் நாளை வந்து பார் என்றாராம்.

உங்களைப் போல கட்சி ஆரம்பித்த உடன் இடைத்தேர்தலைக் கூட சந்திக்காமல் நடிப்பே முதல்வர் பதவிக்கான பாஸ்போர்ட் என கோட்டைக்கு நேரடியாக வந்தவர் அல்ல எங்கள் தளபதி. அறிவாலயத்திற்கு வந்துப் பார். தளபதி கம்பீரமாக வலம் வந்து கொண்டிருக்கிறார். அங்கே தேடாமல் சட்டசபையில் தேடுகிறாய். இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடும் நபர்கள் ஏதும் அறியாதவர்கள்.

எங்களுக்கு முதல்வர் விஜய்யை தேடுவது சிரமம் அல்ல.

ஆமாம் சிலிண்டர் ரோட்டில் போகும்போது எல்லாம் உங்களைப் பார்க்கிறேன். ஆண்டிற்கு 6 சிலிண்டர் என்பது எங்களுக்கு உங்கள் முகத்தை தேடி வந்து காட்டுகிறது.

வெளியூர் பேருந்தில் பெண்கள் பயணம் காசு கொடுத்து செல்லும்போது உங்கள் முகம் நினைவுக்கு வருகிறது.

மின்வெட்டு வரும்போது எல்லாம் முதல்வர் விஜய் முகம் கண் முன் ஆடுகிறது.

பாலியல் கொடுமை நியூஸ் படிக்கும்போது எல்லாம். எங்கள் கண்களுக்குத் தெரிவது முதல்வர் விஜய் முகம் தான்.

விவசாயக் கடன் முழுவதும் தள்ளுபடி செய்யாததால், விவசாயிகளைப் பார்த்தால் முதல்வர் விஜய் முகம்தான் நினைவுக்கு வருகிறது.

தேர்தல் நேரத்தில் தளபதி ஸ்டாலின், “காங்கிரசுடன் சமாதானம் ஆகிவிட்டது” என பொதுவெளியில் அமைதியாகச் சொன்னதை மாற்றி தி.மு.க.வினரை வீழ்த்திவிட்டேன் என்று சட்டசபையில் தமிழக முதல்வர் சொல்வதா?

சட்டமன்றத்தில் தெரியாதுதான். எனக்குத் தெரியாதுதான் என பல தெரியாதுகளை சொல்லி இருக்கிறார் விஜய் மேலும் சில தெரியாதுகளை சேர்த்துக் கொள்ளுங்கள் விஜய் அவர்களே.

தன்னை பெற்ற அப்பா, அம்மாவையே நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற தெரியாதுதான்.

கரூரில் நீங்கள் கொன்ற 41 பேரை, அவரவர் வீட்டில் சென்று ஆறுதல் கூறத் தெரியாதுதான்.

தான் பெற்ற மகளின் பட்டமளிப்பு விழாவிற்கு செல்லாததோடு, செல்லாமலே. வந்த பிறகாவது வந்த மகளை வாரி அணைத்து முத்தம் கொடுக்கவே தெரியாதுதான்.

பெண்களை வரவழைத்து பானத்தில் மாத்திரை கொடுத்து கெடுத்த சரவணன் எம்.எல்.ஏ. கூட்டத்தை தண்டிக்கத் தெரியாதுதான்.

3 வயது சிறுமியை பாலியல் செய்த குற்றவாளியை பிடி என்றால், 2 வயது சிறுமியை சீரழித்த தி.மு.க.வினர் என்று சட்டசபையிலேயே பொய் சொன்ன ஆதவினை கண்டிக்கத் தெரியாதுதான்.

தமிழக சட்டசபையில் நான்கு ஆண்டுகளாய் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடவில்லை என பொய் கூறிய ஆதவை மன்னிப்பு கேட்க வைக்க தெரியாதுதான்.

எனக்கே என் மீது நம்பிக்கையில்லாததால்தான் இரண்டு இடத்தில் நின்றேன் என்று சொல்லத் தெரியாதுதான்.

கவர்னர் ஆட்சி வரக்கூடாது என்பதற்காக மட்டுமல்ல, விஜய் ஆட்சி எப்படி என மக்கள் தெரிந்து கொள்ளட்டும் என்று தளபதி ஸ்டாலின் தன் கூட்டணிக் கட்சிகளை என்னிடம் அனுப்பி வைத்ததை, பெருந்தன்மையுடன் ஒப்புக்கொள்ள தெரியாதுதான்.

கரூரில் வயிற்றுப் பகுதியில் நில்லுங்கள். இங்குதான் இரண்டு நாட்களுக்கு முன்பு எடப்பாடி பழனிச்சாமியும் பேசினார் என்றால், அதைக் கேட்காமல் முண்டிச் சென்று கழுத்துப் பகுதியில் நின்று 41 பேர் சாகக் காரணம் நான்தான் என உங்களுக்கு என்னால் வாக்குமூலம் சொல்லத் தெரியாதுதான்.

மூக்கை பிடித்தும், கழுத்தை கத்தியில் கீறியும் சாக அடித்ததோடு, அரசு மருத்துவமனை கிடங்கு பிணங்களை தூக்கி வந்து இங்கே செந்தில் பாலாஜி ஆட்கள்தான் போட்டார்கள் என பொய் சாட்சி சொன்ன, கரூர் மாவட்ட த.வெ.க. செயலாளர் மதியழகன் மனைவியை கண்டிக்க தெரியாதுதான்.

டெல்லி சென்று பொருளாதாரத்தில், இந்தியாவில் தமிழகம்தான் முதலிடம், பெண்கள் வேலைவாய்ப்பில், படிப்பில் இந்தியாவில் முதலிடம்.

ஜவுளி மின் பொருட்கள் உற்பத்தியில் தமிழகம் தான் முதலிடம் என்று சொன்ன உங்களுக்கு இதற்குக் காரணமான தளபதி ஸ்டாலினுக்கு என் நன்றி என்று கூறத் தெரியாதுதான்.



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

கோட்டையில் கொடியேற்ற அனுமதி பெற்றுத் தந்த கலைஞருக்கு என் நன்றி என எம்.ஜி.ஆர். போல பெருந்தன்மையுடன் பாராட்ட தெரியாதுதான்.

கரூர் விஷயத்தில் எந்தத் தலைவனும், தன் தொண்டன் சாவதை விரும்ப மாட்டான் எனச் சொல்லி என்னை காப்பாற்றிய தளபதி ஸ்டாலினுக்கு என் நன்றி என நன்றி சொல்லத் தெரியாதுதான்.

தொட்டவனை விட மாட்டேன் என்று கூறிவிட்டு, திருட்டு லாட்டரி மூலம் ஏழை பணத்தை சுரண்டித் தொட்டவர்களை எல்லாம் ஆதவிலிருந்து அனைவரையும் சேர்த்துக் கொள்ளும் கொடுமை நெஞ்சுக்காரன் நானே என சொல்லத் தெரியாதுதான்.

முஸ்லீம் லீக் ஆரம்பத்தில் நாங்கள் தேடிச்சென்றபோது, “எங்களுக்கு என்று ஏதும் இல்லை. எங்கள் கூட்டணி தலைவர் ஸ்டாலின் சொல்வது தான் முக்கியம்” என்று சொன்னதை இப்போது சொல்லத் தெரியாதுதான்.

த.வெ.க.வை ஆதரிக்கப் போகிறோம் என்று சொன்னபோது முகம் சுளிக்காமல், அந்த உரிமை உங்களுக்கு இருக்கிறது என்று தளபதி ஸ்டாலின் சொன்னதற்காக என் நன்றி எனக் கூறத் தெரியாதுதான்.

அ.ம.மு.க. வெற்றி வேட்பாளர் காமராஜின் பொய்யான கடிதத்தை கவர்னரிடம் கொடுத்து விட்டு, பின் மறுத்து, பின் ஏற்று, இந்தக் கூத்து எந்த நோக்கத்தில் என சொல்லத் தெரியாதுதான்.

சட்டமன்ற உறுப்பினர்களில் அ.தி.மு.க.விலிருந்து 25 நபர்கள் மட்டுமே பிரிந்து போன சூழலில், அவர்களிடம் சென்று நான் வாழ்த்தியது ஏன் என சொல்லத் தெரியாதுதான்.

25 நபரை திரிசங்கு நிலையில் தொங்கவிட்டது ஏன் என சொல்லத் தெரியாதுதான்.

கேரளாவில் பதவி ஏற்பு விழாவுக்கு காங்கிரஸ் அழைத்தும் போகாதது ஏன் என சொல்லத் தெரியாதுதான்.

தருமபுரம் ஆதீனத்தை, மனிதனை மனிதன் தூக்கிடும் பல்லக்குக்கு ஆதரவு தந்தது ஏன் என சொல்லத் தெரியாதுதான்.

கூட்டணி தர்மத்தை மீறி. சும்யூனிஸ்ட் தோழர் மகேந்திரனை தனது த.வெ.க.வில் சேர்த்தது ஏன் என சொல்லத் தெரியாதுதான்.

எப்போது வேலையில்லா பட்டதாரிகளுக்கு ரூ. 4,000/- மும், முதியோர் உதவித் தொகை ரூ.3,000/- மும், திருமணத்திற்கு தாலியும், அரசு கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோருக்கு ஆண்டுக்கு ரூ.15,000/- மும் வழங்குவது எப்போது என சொல்லத் தெரியாதுதான்.

கொரோனா நேரத்தில் ரூ.1,000/-க்கு மேல் கொடுக்க முடியாது என எடப்பாடி கை விரித்த சூழலில், ஒரு மாதத்தில், குடும்பத்திற்கு நிதியாக தலா 4,000/- ரூபாய் வழங்கிய தளபதி ஸ்டாலின் நிர்வாகத்தை பாராட்டிச் சொல்லத் தெரியாதுதான்.

அன்புத் தாயாக, என் மக்களுக்கு தலா ரூ. 1,000/- கொடுத்தாலே போதும் என மகிழ்ந்த தளபதி ஸ்டாலினை எனக்குப் பாராட்டிச் சொல்லத் தெரியாதுதான்.

டெல்லி சென்று அமைச்சர்களை அடிக்கடி சந்தித்து, நிதி பெற்று வரும் வாய்ப்பினை, ஏன் கோட்டை விட்டேன் என சொல்லத் தெரியாதுதான்.

இப்படி சொல்லலாம், சொல்லலாம் என்றாலும், எஞ்சி நிற்கும் சொல்ல எல்லாம். ஒன்றை மட்டும் சொல்கிறேன்,

ஆர்.கே.நகர் வெற்றிக்குப் பின் தினகரன் தன் வாயில் வந்ததை எல்லாம் பேசினார். ஸ்டாலின் வா திருவாரூருக்கு, உன் அப்பன் ஊருக்கு, ஆடையை அவிழ்த்துவிட்டு அனுப்புவேன் என்றார். அந்த ஒரு வெற்றியோடு முடிந்தது தினகரனுக்கு.

அது போல உங்கள் வார்த்தை மிஞ்சினால் இந்த வெற்றியோடு தமிழக வெற்றிக்கழகமும் முடியும் என்பதை மட்டும் என்னால் சொல்ல முடியும்தான்.

“ஒரு கோமாளி அரண்மனைக்குச் சென்றால் அவன் அரசனாகி விடுவதில்லை”.

“அரண்மனைதான் சர்க்கஸ் கூடாரமாகிவிடும்” என்பது துருக்கியில் பழமொழி, அது தமிழ்நாட்டில் புதுமொழி.

# அப்பளங்கள் ஆட்டம் போடுகின்றன!

ஒரு எருது (மாடு) அரண்மனைக்குள் நுழைந்தால் அது அரசனாகாது; மாறாக, அந்த அரண்மனை ஒரு மாட்டுத் தொழுவமாக மாறிவிடும்!’ என்பது போல, தகுதி இல்லாதவன் அதிகாரத்திற்கு வரும்போது ஏற்படும் விளைவுகளைப் பற்றி மேற்குறிப்பிட்ட சிர்க்கேசியன் (Circassian)கதை கூறுகிறது. அதாவது தகுதியில்லாத ஒரு நபர் உயர்ந்த இடத்திற்கு சென்றால் அந்தப் பதவியின் தரம், நேர்மை, ஆளுமை, மாண்பு குறையும் என்பதை உணர்த்த இந்த நவீன வாசகம் பயன்படுத்தப்படுகிறது.

இக்கதையின் பெயர்களைச் சற்று மாற்றிக் கூறினார் பிரிட்டிஷ் கல்வி ஆலோசகர் எலிசபெத் பான்க்ஸ்.”ஒரு கோமாளி அரண் மனைக்குச் சென்றால்... அவன் அரசனாகி விடுவதில்லை. அரண் மனை தான் சர்க்கஸ் கூடாரம் ஆகிவிடும்!” என்பது பழமொழி. ஆனால், இதுபின்னாட்களில்துருக்கிநாட்டுபழமொழிஎன்றுமருவி பிரபலமாகிவிட்டது.


2022ல் பிரபல ஊடகவியலாளர் செடெப் கபாஸ் (Sedef Kabas) அந்நாட்டு அதிபர் எக்டோஹனை(Recep Tayyip Erdogan)விமர்சிக்கும் நோக்கில் இந்த அசல் எருது பழமொழியை ஒரு தொலைக் காட்சி விவாதத்தில் பயன்படுத்தினார். மேற்குறிப்பிட்ட”எருது” “தொழுவம்” கதையை “கோமாளி” (Clown), “சர்க்கஸ்” (Circus) என்று மாற்றி, பிரிட்டிஷ் கல்வி ஆலோசகர் எலிசபெத் பான்க்ஸ் (Elizabeth Bangs)என்பவர், பிரிட்டிஷ் பிரதமர் போரிஷ் ஜான்சன் என்பவரை 2022ஜனவரி 23 அன்று அரசியல் விமர்சனம் செய்தார். இந்தப் புகழ் பெற்ற புனைக்கதையில் வரும் நபர்கள் டொனால்டு டிரம்ப், வோலோடிமிர்போன்றவர்களை அரசியல் கோமாளித் தலைவர்கள் என விமர்சிக்கப்பட்டார்கள். அதே போல் தமிழ்நாட்டிலும் விமர்சிக்கப்படத் தகுந்த நபர் ஒருவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துஉலா வருகிறார்.ஆம்; இப்போது தமிழ்நாடு சட்ட மன்றம் ஒரு கோமாளி நுழைவால், விசிலடிச்சான் குஞ்சுகளால் திரையரங்கம் ஆகிவிட்டது.

விடுதலைப் போராளிகளாலும், மொழிப்போர்த் தியாகிகளாலும், சமூக நீதிச் சான்றோர்களாலும், அரசியல் சட்டமேதைகளாலும், ஆன்றோர், சான்றோர் பெருமக்களாலும் அலங்கரிக்கப்பட்டு வந்த சட்டமன்றம்... இப்பொழுது அநாகரிகவாதிகளால் அறநெறி பிறழ்ந்து,சந்தி சிரிக்கிறது; சாக்கடை நெடி வீசுகிறது!

நீதிக்கட்சித் தலைவர்களால் சமூக நீதி நெடும்பயணத்தைத் தொடங்கி வைத்த சட்ட மன்றம்! நாட்டு நலனில் அக்கறை கொண்டு உலவிய உன்னத மனிதர்களான மூதறிஞர்இராஜாஜியும், தேச நலனும், தெய்வீகமும் பேசியபசும்பொன் தேவரும், சிறுபான்மை மக்களும், பெரும்பான்மை மக்களும் அண்ணன்தம்பிகள் என்று பேசியகண்ணியமிகு காயிதே மில்லத்தும் கடமையாற்றிய சட்ட மன்றம்! படிக்காத மேதையான பெருந்தலைவர் காமராஜரால் பஞ்சைகளுக்கும், பராரிகளுக்கும் பள்ளிக்கூட வாசலைத் திறந்து வைத்து பாதை போட்டுத் தந்தசட்ட மன்றம்! பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் சீடரானவரும்; பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் ஈர்த்தவரும்; பட்டி, தொட்டிகள் எல்லாம் பாமர மக்களைக் கோட்டைக்கு அழைத்து வந்தவரும்; எதிர்க்கட்சிகளைப் பேச வைத்து, ஏறிட்டுப் பேரழகு பார்த்தவரும்; தமிழும், தமிழனும் தலைநிமிர்ந்திட நின்று உலவியவருமான தன்னேரிலாத் தலைவர்பேரறிஞர் அண்ணா முழக்கமிட்ட சட்டமன்றம்!

ஆன்மீகச் சூழ்ச்சிகளை அறுத்தெறிந்தஈரோட்டுக் கிழவர்பெரியார், மாலை நேரக் கல்லூரிகள்உருவாக்கிய காஞ்சித் தலைவர் அண்ணா ஆகியோரின் பகுத்தறிவு மடி தவழ்ந்தவரும்; சுயமரியாதைத் தடி சுமந்தவரும்; மாநில சுயாட்சி, இட ஒதுக்கீடு கொள்கைக் கோட்பாட்டிற்காக முழக்கமிட்டவருமான முத்தமிழறிஞர் கலைஞரால்; சாமானிய, சாதாரணமானவர்க்கும்மக்கள் நலத் திட்டங்களில் சாதனைகள் படைத்த சட்டமன்றம்! எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் தமிழர் எச்சங்கள் வீழாமல் காத்திடும் பாதைகளை பின்பற்றிய சட்டமன்றம்! மூத்தோர் வழிகாட்டியபாதைகளைப் பின்பற்றி, தனது வெல்திறனால் விரிகுடை ஒன்றியத்தை ஒரு விரலில் சுருட்டி வைத்திருந்தவரும்;முத்தும், பவளமும், மாணிக்கமும், இரத்தினமும் என எழில்மிகு நவரத்தனச் சாதனைக் கற்கள் பதித்தமணிமகுடம் தரித்தவருமான மு.க. ஸ்டாலின் நடத்தியதிராவிட மாடல் அரசின் சட்டமன்றம்!

கவிஞர் தமிழ்தாசன்
கழக தீர்மானக்
குழுத் தலைவர்



இன்று தற்குறிகள் ஆளும் தவளை அரசு இருப்பதால்; மக்களுக்கான சாதனைகள் நிகழ்த்த வேண்டிய தமிழ்நாடு சட்டமன்றம் தாகம் தீர்க்காத தண்ணீர் பந்தல்ஆகி கானல் நீரை விற்பனையாக்கி கொண்டிருக்கிறது!

ஏமாற்றுத் திட்டத் தேர்தல் வாக்குறுதிகள் பல கொடுத்து ஆட்சிக்கு வந்தீர்களே.... வேலை இல்லாதவர்களுக்கு ரூபாய் 4,500 எங்கே? அரசுப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கு ரூபாய் 15,000 எங்கே? முதியோர் தொகை ரூபாய் 3,000 எங்கே? மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 2,500 எங்கே?, திருமணம் வைத்திருக்கிற பெண்களுக்குத் தாலிக்குத் தங்கம் எங்கே? எரிவாயு சிலிண்டர் 9 எங்கே?நாள்தோறும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆணவப் படுகொலைகள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் எனச் சட்ட ஒழுங்கு சீர்கேடு, மின்வெட்டு, பயிர்க் கடன் முழுவதும் தீர்க்கக் கூறும் விவசாயிகள் போராட்டம்,பாட்டாளிகள், துப்புரத் தொழிலாளிகள் போராட்டம் என மக்கள் பிரச்சினை தீர்க்க இவற்றுக்கான என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்று அடுக்கடுக்கான கேள்விகளை ஆளுநர் உரையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேட்டாரே..? அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொன்னாரா ஜோசப் விஜய்?

“அப்பாவை காணவில்லை” என்று தேடும் அறிவிலிகளுக்கு நாம் கூறும் பதில் இதுதான்...ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் இந்த மாதம் அனுப்பிய ரூபாய் 1,000 உரிமைத் தொகையில் இருக்கிறார்! பள்ளி பிள்ளைகள் சாப்பிடும் காலை உணவில் இருக்கிறார்!பேருந்தில் கட்டணத்தில்பயணம் செய்யும் பெண்களிடம் இருக்கிறார்!புதுமைப்பெண் திட்டங்களில் சாதனை செய்த மகளிர் இடம் இருக்கிறார்! நான் முதல்வன் திட்டத்தில் 40 இலட்சம் பயனாளிகளின்இருக்கிறார்! கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் பெறும் ரூபாய் 1,000 இல் இருக்கிறார்! வெட்கமின்றி ஸ்டிக்கர் ஒட்டிய சிங்கப்பெண் செயல்பாட்டில் இருக்கிறார்! இவர் அஞ்சி, அஞ்சிச் சாகும்பத்திரிக்கையாளர் சந்திப்பில் அவர் இருக்கிறார்!

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெறும் ஊதியத்தில் இருக்கிறார்!விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுபான்மை மக்கள் நலம், அயலகத் தமிழர்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தில் இருக்கிறார்!... இப்படி அவரின் சாதனைகள் எல்லாம் தமிழ்நாடு சட்டமன்றத்தின் சாதனைகளில் அவர் வாழ்ந்து கொண்டுஇருக்கிறார். திராவிட மாடல் அரசியல் அதிசியம்செய்து கொண்டிருக்கிறார். இவை பற்றி உண்மையும், நேர்மையும் இருக்குமானால் அவற்றைத் தேடிக் கண்டு பிடித்துப் பார்? எந்தக் கயவராலும்எவராலும் அழிக்க முடியாத, காலச் சாதனைகளால் பொற்கால ஆட்சி நடத்திய அவர்; தமிழ்நாட்டுச் சரித்திரப் பதிவேட்டில் ஒவ்வொரு துகள்களிலும்கோட்டை ஆட்சித் தூண்களிலும் அவரது தூயத் தொண்டால்வாழ்ந்து கொண்டிருக்கிறார் . அவர் தான் மு.க. ஸ்டாலின்!

கடந்த ஆட்சியில், “கட்சி நிதி” என்ற பெயரில் அடிக்கப்பட்ட கொள்ளைப் பணத்தை எல்லாம் இப்போது எங்கள் அரசு ஒவ்வொன்றாக மீட்டுத் தமிழக அரசின் கஜானாவிற்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறது .மக்கள் வரிப்பணத்தில் ஒரு பைசாவைச் கூட நாங்கள் தொட மாட்டோம்; வேறு யாரையும் தொடவும் விடமாட்டோம்; தொட்டால் விடமாட்டோம்; இதற்கு முன்னாடி தொட்டவர்களையும் விடமாட்டோம்.” என்று வீரபாண்டிய கட்டபொம்மன் வசனம் பேசி எதிர்க்கட்சிகள் இல்லாதசட்டமன்றத்தில் தானே அட்டைக் கத்தியைச் சுழற்றிக் கதறி இருக்கிறார் முன்னாள் நடிகர்ஜோசப் விஜய்.

ஊழலைப் பற்றி வாய் கிழியப் பேசும் மாஜி நடிகர் விஜய் ஜமுக் காலத்தில் வடிகட்ட முடியாத தனது ஊழலையும், தனது த.வெ.க.வினர் ஊழலையும் வெளியில் சொல்ல மறைத்து விட்டது ஏன்?

“புலி” படத்தில் நடிக்க வாங்கிய ரூபாய் 15 கோடி வருமானத்தைத் திட்டமிட்டுக் காட்டாமல் மறைத்தது ஏன்?அதற்கு வருமான வரித்துறை அபராதம் விதித்ததை உறுதிப்படுத்தி,உயர் நீதிமன்றமே அதனைக் கட்ட கூறியுள்ளது உண்மையா? இல்லையா? ஒன்றிய அரசை ஏமாற்ற 15 கோடியை கட்ட மறைத்துஅந்த ஊழலை செய்தது ஏன்? இதற்கு யோக்கிய சிகாமணி பதில் கூறுவாரா?அதுபோல் 2026 சட்டமன்றத் தேர்தலில் சென்னைபெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதியிலும் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் உறுதி பத்திரங்களில், கருப்புப் பணமுறைகேடு ஊழல்வாதியான விஜய்; தான் குறிப்பிட்ட விபரத்தில் அசையும் சொத்துக்களின் மதிப்பு சுமார் 100 கோடி அளவுக்கு முரண்பாடான தொகையை மறைத்துக் காட்டியது ஏன்?

இது குறித்து பெரம்பூர் வி. விக்னேஷ் என்பவர் வழக்கு போட்டு இருக்கிறாரே உண்மையா? இல்லையா?பெரம்பூர் தொகுதி வேட்பு மனுவில்அசையும் சொத்தின் மதிப்பு ரூபாய் 115.13 கோடி என்று கூறி இருந்தார். ஆனால், திருச்சி கிழக்குத் தொகுதியில் வேட்பு மனுவில் அசையும் சொத்து ரூபாய் 220.15 கோடி என்று குறிப்பிட்டுள்ளாரே; சுமார் 105 கோடிக்கு மேல் வித்தியாசம் காட்டி ஏமாற்றி இருக்கிறார் அல்லவா?இப்படிப் பொய்யான தகவல் தந்து மோசடியான ஊழல் செய்த இந்த உத்தம புத்திரன் மீது என்ன நடவடிக்கை?தேர்தல் ஆணையம் முன் உள்ள விசாரணை நடவடிக்கையில்பெரும் மோசடி செய்த இந்த நபரின் சட்டமன்ற உறுப்பினர் பதவி இழப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டாமா?

அதுபோல் தனது அமைச்சவையில் கல்வி அமைச்சர் இராஜமோகன், த.வெ.க கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களான தஞ்சாவூர் விஜய்சரவணன்,விருதுநகர் செல்வம், தாம்பரம் சரத்குமார், குமாரபாளையம் விஜயலட்சுமி, கவுண்டம்பாளையம் கனிமொழி, ஆவடி இரமேஷ், அம்பத்தூர் பாலமுருகன், போளூர் ஆர். அபிஷேக் போன்றவர்கள் தாங்கள் வேட்பு மனுவில் தங்களது உண்மையான கல்வித் தகுதியை மறைத்து, கூடுதலான படிப்பைப் படித்ததாகக் கூறி பெரும் மோசடி செய்து உறுதிமொழி பத்திரம் (AFFIDAVIT) தாக்கல் செய்துள்ளனரே? தேர்தல் ஆணையத்தின் முன் ஆய்வில்இருக்கக்கூடிய இந்த விசாரணை மனுக்கள் மீது என்ன நடவடிக்கை?சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க வேண்டாமா? ஊழல்களை ஒழிக்க பிறப்பெடுத்துச் சென்னை கோட்டையில் கோட்டு போட்டு, பொட்டு வைத்து நாடகம் நடத்தி வரும்இந்த நவீன அரிச்சந்திர மகாராஜா தன் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஊழல் செய்த நடவடிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாரா? அவரால் முடியாது! ஏன் அவரே திருட்டுக் கணக்கு காட்டி இருக்கிறார் அல்லவா? எப்படி நடவடிக்கை எடுப்பார்? இப்படியான ஊழல் வாதிகள் மீதுள்ள மோசடித்தனத்திற்குஅட்டைக் கத்தி வீரர்; அசகாய சூரர் என்ன பதில் சொல்லப் போகிறார்?

சட்டசபை சந்தைக் கூடமாக்கப்பட்டிருக்கின்றது. பொதுவெளிப் பொட்டல்களில் கத்திய புல்லறிவாளர் கூட்டங்கள், நிர்வாகத் திட்டங்கள், சட்டங்களை உருவாக்கும் மக்களுக்கான அவையில்; அட்டைக் “கத்தி”கள் அரண்டு, அலறிச் சுழற்றுகின்றன. தொண்டு செய்ய வந்த தூய சக்திகள் இப்போது தோட்டா இல்லாத துருப்பிடித்த “துப்பாக்கி”கள் ஆனது ஏன்?

திரைப்படப் பாணியில் வசனத்தை மனப்பாடம் செய்துபேசிச் சட்டப்பேரவை ஒரு ஸ்டுடியோ படப்பிடிப்புத் தளமாக மாற்ற முயற்சி செய்திருக்கிறார் ஜோசப் விஜய்.

ஆம்; கூகைகள் அலறுகின்றன.... கோட்டான்கள் குமுறுகின்றன... அது குயில் பாட்டு பாடுவதாக நினைத்து கழுதைகளாகக் கத்துகின்றன. நற்றமிழ் சங்கீதம் என நரிகள் ஊளை இடுகின்றன. மக்கிய மரக்கட்டைகள் மரகத வீணைகள் ஆகிவிடாது உயர, உயர பறந்தாலும் ஊர் குழுவி இராஜாளிப் பறவை ஆகிவிடாதே!...பூனைகள் மீசை வைத்த புலியாகிவிடாதே!... நரிகள் அரிதாரம் பூசிய தால் அரிமா ஆகிவிடாது! “செஞ்சிக்கோட்டை ஏறியவனெல்லாம், தேசிங்கு இராஜாக்கள் ஆகி விட முடியாது!” என்றார் பேரறிஞர் அண்ணா. ஆம்; காமராஜர், அண்ணா, கலைஞர், எம்ஜிஆர். மு.க.ஸ்டாலின் போன்று கோட்டை நாற்காலியில் அமர்ந்தவர்எல்லாரும், சிறந்த மக்கள் தொண்டாற்றும் முதல்வராகி ஆகி விட முடியாது.

சட்டசபையில் ஆளுநர் உரையின் போது, “ஆதாரத்துடன் குற்றச்சாட்டுகளைச் சொல்லுங்கள்” என்று ஜோசப் விஜய் அரசுக்கு வினா எழுப்பிக் கேட்டதற்காக, திமுகவைச் சேர்ந்த முன்னாள்அமைச்சர் எ.வ.வேலு, மற்றும் அதிகாரிகள் வீடுகள் அலுவலகத்தில் இலஞ்ச ஒழிப்புத்துறையினரை ஏவிச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றனர். “நான் பரிசுத்தமானவன் என்று நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றி பெறுவேன்” என்கிறார் எ.வ.வேலு. “இனி எதிர்க்கட்சிகள் ஒழிந்து விட்டன” எனச் “சைகை” காட்டி சினிமா பாணியில் சட்டமன்றத்தில் பேசியுள்ளார். கரூரில் 41 உயிர்களைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டு இரவோடு இரவாகத் தப்பித்து ஓடிப் போய்ப் பனையூரில் பதுங்கிய “காகித புலி” “அட்டைக் கத்தி வீரர்” அல்லவா இவர்?திமுக நெருக்கடி நிலையையே சந்தித்த இயக்கம். ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணிகளையே சந்தித்த பாடி வீடாம் கொள்கைக் குன்றம் திமுக!ஒன்றிய, மாநில அரசுகள் கழகத்திற்கு எதிராகப் பலப் பொய் வழக்குகள், வம்புகள் எனப் புனைந்துஈட்டிகள் பாய்ச்சிய போதும், அதை அரசியல் இராஜதந்திர நடவடிக்கையால்முறியடித்து வெற்றி பெற்றஇயக்கம்தான் திமுகவும், அதன் தலைவர்களான அண்ணா கலைஞர்,மு.க. ஸ்டாலினும்!

**பேரறிஞர் அண்ணா அவர்கள் 1950 களின் பிற் பகுதியில் சேலம் கூட்ட நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்தார். நிகழ்ச்சி முடித்து விட்டு, மதியம் தொண்டர் ஒருவர்ஏற்பாடு செய்திருந்த வீட்டில் அழைப்பின் பேரில் உணவு அருந்த போனார்.உணவு அருந்த அமர்ந்திருந்த அண்ணா முன் இலையில் கூட்டு, பொரியல் அப்பளம், முட்டை என பரிமாறப்பட்டன. மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது.விசிறியின் சுழற்சியில் இலையில் இருந்த அப்பளம் ஆடிக் கொண்டே இருந்தது. அதைப் பார்த்த அண்ணா அவர்கள் தோழர்களிடத்தில், “பார்த்தீர்களா?காலணா (6 பைசா) அப்பளம் காற்றில் தலை விரித்துஆடிக் கொண்டே இருக்கிறது.... நாலணா (25 பைசா) முட்டை நகராமல் ஆடாமல், அசையாமல் அப்படியே வைத்த இடத்திலேயேஇருக்கிறது. இன்றைய அரசியலும் அப்படித்தான்!..”என்று நகைச்சுவையாக இரட்டுறமொழிதலில் தோழர்களிடத்தில், அரசியல் பற்றிப் பேசிக் கலகலப்பு ஊட்டினார். அதைப்போலத் தான்இப்பொழுது திடீர் பிரவேசம் செய்த அப்பளங்கள் தமிழக அரசியலில் அறிவிலித்தன ஆட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கின்றன!.**

**தேர்தல் முடிவு வந்தவுடன், முன்னாள்உச்ச நீதிமன்றநீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ, ஜோசப் விஜய் பற்றிசிலமணிவாசகக்கருத்துக்களை வெளியிட்டு வருத்தப்பட்டார்.” மூளையில் எதுவும் இல்லாத சினிமா நடிகர் ஜோசப் விஜய் எனும் முட்டாளால் தமிழர்கள் விரைவில் ஏமாற்றம் அடையப் போகிறார்கள்” என மிகக் கடுமையான வார்த்தைகளால் சாடிக் கருத்துக்களை வெளியிட்டார். விஜயை ஒரு முட்டாள் (Idiot)என்றும், கோமாளி (Clown)என்றும், தமிழ்நாட்டின் பெரிய சமூகம், பொருளாதாரம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்த ஒரு அறிவோ, புரிதலோ, திட்டங்களோ இல்லாத ஒரு முட்டாள் என்றும் விஜயை குறிப்பிட்டார். அவர் ஏமாற்றுக்காரர் மோசடி பேர்வழி (Fraud and a Con artist)என்றும் நேரடியாகவே குற்றம் சாட்டினார்.**

**“மக்களுக்கு ஏமாற்றம் (Tamil Nadu will soon Disillusioned of him)தரக்கூடியவர்; விஜய் மீதும், அவரது கவர்ச்சி அரசியல் மீதும் தமிழக மக்கள் வைத்துள்ள மாயை நம்பிக்கை விரைவில் உடைந்து மக்கள் பெரும் ஏமாற்றம் அடையப் போகிறார்கள்!”.... என்று திட்ட வட்டமாக தனது எக்ஸ் வலைதளம் மூலம் விமர்சனக் கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார். “மேலும் விஜய் ஒரு போலி வாக்குறுதி அளிக்கும் ஹாமிலினி (Pied Piper of Hamelin)யின் குழல் ஊதி போன்றவர்; மக்களைப் பேரழிவிற்கு அவர் அழைத்துச் செல்வார்!” என்று கட்டியம் கூறியுள்ளார். அவர் கூறியது எந்த அளவுக்கு உண்மை என்பதுஇப் பொழுதுதமிழக மக்களுக்குபுரியவரும்.**